# இறையியல் (பாடம் 1:5)

தேவனுடைய நியாயம் நீதி

இத்தன்மை அவருடைய பரிசுத்தத்துடன் சம்பந்தப்பட்டது. Thiessen சுட்டிக் காட்டியது போல, தன்னுடைய சிருஷ்டிகள் மீதான அவருடைய பரிசுத்த நடவடிக்கையே அவருடைய நீதியும் நியாயமுமாகும். இக்குணம் பலமுறை வேதத்தில் தேவனுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

(2 நாளா 12:6, எஸ்றா 9:15, நெகே 9:33, சங்கீதம் 89:41, ஏசாயா 45:21, தானி 9:14, யோ 17:25, 2 தீமோ 4:8, வெளி 16:5) அவர் நியாயமுள்ளவராயிருக்கின்ற படியால் தன்னுடைய உலகுக்கு சட்ட திட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் விதித்துள்ளார். அவர் நீதியுள்ளவராயிருப்பதனால், தன்னுடைய சட்டதிட்டங்கள் மீறி நடப்பவர்களைத் தண்டிக்கிறார். (உபா 7:9,12,13, 2நாளா 6:15, சங் 58:11, மத் 25:22, ரோமர் 2:7, எபி 11:26, ஆதி 2:17, யாத் 34:7, எசே 18:4, ரோமர் 1:32, 2:8-9, 2 தெச 1:8).

பொதுவாக நியாயம் என்பது சட்டத்தின்படி செயற்படுவது. மனிதர்களை பொறுத்தவரையில் “இருக்கும் சட்டத்தின்படி நடப்பது” என வரையறுக்கலாம். ஆனால் தேவனுக்கு எவ்வித சட்டங்களும் இல்லை. அவர் எல்லா சட்டங்களையும் விட மேலானவர் என்பதால் அவர் நியாயமுள்ளவர் என இதனடிப்படையில் சொல்வது முறையாகாது என வாதிடுவர். எனினும் அவரில் ஒரு சட்டம் இருப்பதால் அவர் அந்த சட்டத்தின்படி செயற்படும் அவர் நியாயமுள்ள தேவன் என நாம் அழைப்பது தவறல்ல.

அவர் நீதியும் நியாயமுள்ளவராக இருக்கின்றபடியால் அவரே பூமியனைத்திற்குமான நியாயாதிபதியாக இருக்கிறார். (ஆதி 18:25, நியாய 11:27, சங் 75:7, சங் 82:8, எபி 12:23) வேதாகம சரித்திரம் அவர் நியாயாதிபதி என்பதை நமக்கறியத் தருகின்றது. (ஆதி 3:6-8,18-19,15:14, யாத் 7-12,32:26-35, லேவி 10:1, யோசு 7, நியா 2:11,3:5, 4:1, 2இராஜா 17,22:15,23:26, மத் 21:23, ,1தெச 2:14, தானி 4:5, அப் 5,12:21,13:8, 1கொரி 11:29-32). எல்லா காரியங்களையும் தேவன் நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார். (பிர 11:9) ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார். (பிர 12:14)

நியாயாதிபதியாகிய தேவன் உலகை நியாயந்தீர்க்க வரப்போகிறார். அதற்கென அவர் ஒரு நாளை நியமித்திருக்கிறார். (அப் 17:31). அவர் நீதியுள்ள நியாயாதிபதி (2தீமோ 4:8) வரவிருக்கும் அவர் வாசற்படியிலே நிற்கிறார் (யாக் 5:9) உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தோரையும் அவர் நியாயந்தீர்ப்பார் (1பேதுரு 4:5). அவர் மனுஷனுடைய அந்தரங்கங்களையும் நியாயந்தீர்ப்பார் (ரோமர் 2:16) (யோவான் 5:22,26,28) பார்க்கவும்.

தேவனின் பொறாமை

இக்குணம் தேவனுக்கு பொருந்துமா என நம்முள் கேள்வி எழலாம். எனினும் சீனாய் மலையில் கற்பனைகளை இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்தபோது தேவன் தன்னைப்பற்றி வெளிப்படுத்திய முதலாவது குணம் பொறாமையேயாகும். (யாத் 20:5). தமிழ் வேதாகமத்தில் எரிச்சல் என உள்ளது. பொறாமை என்றே இருக்க வேண்டும். யாத் 34:14 ல் “கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே என்பதிலும் அவர் பொறாமையுள்ள தேவன் என்பதே சரி. இக்குணம் அவருடைய பெயராகவும் இருக்கின்றபடியால் அவரைப் பற்றி அறிந்துகொள்ள இது உதவுகிறது. எண் 25:11, உபா 4:24,6:15, 29:20, 32:16,21, யோசுவா 24:19, 1இராஜா 14:22, எசே 8:3-5,16:38,42, 23:25, 36:5, 38:19, 39:25, யோவேல் 2:18, நாகூம் 1:2, செப்பனியா 1:18,3:8, சகரியா 1:14,8:2, சங் 75:58, 79:5) அவரின் இக்குணம் அவருடைய செயற்பாட்டின் காரணமாயமைகிறது. (எசே 39:25, சகரி 1:14, நாகூம் 1:2). பவுலும், 1கொரி 10:22 ல் இதைப்பற்றி குறிப்பிட்டுள்ளார். யாக்கோபு இக்குணத்தை வைராக்கிய வாஞ்சை என எழுதியுள்ளார் (யாக் 4:5).

மனிதர்களைப் பொறுத்தவரையில் இருவகையான பொறாமைகள் உள்ளன. மற்றவனுக்கு கிடைத்தது தனக்கு கிடைக்கவில்லையே என அவன் மீது பொறாமைப்படுவது பிழையானது. ஆனால் அன்புறவை பாதுகாத்துக் கொள்வதற்கான பொறாமை பிழையற்றது. Tasker குறிப்பிட்ட போது, தன்னுடைய தாம்பத்திய வாழ்வில் மாற்றான் ஒருவனின் தலையீட்டைப் பற்றிக் கவனம் கொள்ளாதவன் ஒழுக்கநெறியை அறியாதவனே. “ஸ்திரீயைப் பற்றிய எரிச்சல் புருஷனுக்கு மூர்க்கத்தை உண்டு பண்ணும் என திருமறையும் இச்சத்தியத்தை விளக்குகிறது” (நீதி 6:34). அதாவது தனக்குரியதை மற்றவன் அபகரிக்கையில் அவன் மீது பொறாமைப்படுவது பிழையல்ல. இம்முறையிலேயே தேவனுடைய பொறாமையும் உள்ளது. தன்னுடைய மக்கள் தான் நேசித்த மக்கள், மற்ற தேவர்களிடம் செல்வதை விரும்பாத அவர் பொறாமைப்படுகிறார். (யோசு 24:19, 1இராஜா 14:22, சங் 78:58, 1 கொரி 10:22). விக்கிரகத்தின் ஸ்தானம் தேவனுக்கு பொறாமையை ஏற்படுத்துவதாயிருக்கிறது (எசே 8:3) தேவனுக்கும் மக்களுக்குமிடையேயுள்ள உறவு கணவனுக்கும் மனைவிக்குமிடையேயுள்ள உறவுக்கு உவமிக்கப்பட்டுள்ளமையினால், அந்நிய தேவர்களை நாடிச்செல்வது விபச்சாரமாகக் கருதப்பட்டது. குறிப்பிட்டபடி கர்த்தர் தன் மக்களுடைய உண்மையான கணவனாயிருக்கின்ற படியால், நான் சாத்தானுடன் விபச்சாரத்தில் ஈடுபடுவது அவருக்கு பொறாமையையும் எரிச்சலையும் ஏற்படுத்துகிறது.

கற்புள்ள மனைவியர் தங்கள் கணவனுக்கு உண்மையாயும், விசுவாசமாகவும் இருப்பதுபோல, நாமும் நம் தேவனுக்கு பொறாமை ஏற்படும் வண்ணம் அவரை விட்டு வேறு தேவர்களிடம் போகக்கூடாது. J.J.Packer சுட்டிக்காட்டியது போல அவருடைய பொறாமை, அவருடைய உடன்படிக்கை, அன்பின் அடிப்படையில் ஏற்படுவதாகும். இவ்வன்பு தற்செயலாக ஏற்பட்டதே அன்றி வெறும்

கவர்ச்சியினாலோ பரிதாபத்தினாலோ ஏற்பட்டதல்ல. மாறாக அவருடைய சுயாதிபத்திய திட்டத்தின் அனாதித்தீர்மானத்தின் வெளிப்பாடாகும். தனக்கென, தன்னுடைய மகிமைக்கென தனக்குத் தேவையான மக்கள் மீது அவர் கொண்ட நேசமாகும். எனவே இம்மக்கள் தேவனை விட்டு மற்ற தெய்வங்களிடம் போகும் போது அவருக்கு பொறாமை ஏற்படுகின்றது. எனினும் இவை மறுவுருக மொழியின் அடிப்படையில் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

தேவனின் கோபம்

அன்புள்ள தேவன் எப்படி கோபத்தின் தேவனாகவும் இருக்கமுடியும் என நாம் வினவலாம். ஆனால் அவர் பாவியை நேசிக்கையில், அவன் செய்யும் பாவத்தை வெறுப்பவராயிருக்கிறார். A.W.Pink சுட்டிக் காட்டியது போல, வேதத்தில் தேவனுடைய அன்பை விட கோபத்தைப் பற்றிய குறிப்புகள் அதிகமாக இருக்கின்றன. (ரோமர் 1:18, 2:5, 5:9, 12:19, 13:4, 1தெச 1:10, 2:16, 5:9, வெளி 6:16, 16:19, லூக்கா 21:22-24)

தேவனுடைய கோபம் மனிதர்களுடையதைப் போன்றதல்ல. சடுதியாய் ஏற்படும் ஆத்திரம், கட்டுப்பாடற்ற உணர்ச்சி, மூர்க்கம் போன்றதல்ல அது. தேவனுடைய கோபம் நியாயத்தின் அடிப்படையில் அமைவது. அவருடைய நீதி தவறாத நிர்வாகத்தில் அவர் நியாயாதிபதியாய் செயற்படுவதனால் ஏற்படுவது. மட்டுமல்லாமல் தேவ கோபம் மனிதன் தானாகவே தன் மீது வருவித்துக் கொள்வதொன்று (ரோமர் 2:5) மக்களே அந்தகாரத்தை விரும்பி தேவனை விசுவாசியாதவர்களாக ஆக்கினைக்குள்ளாகின்றனர். (யோ 3:18-19)

தேவன் பரிசுத்தமுள்ளவராயிருக்கின்றபடியால் அவர் எல்லா பாவங்களையுமே வெறுக்கிறார். அவர் எல்லா பாவங்களையுமே வெறுப்பதனால் அவருடைய கோபம் பாவிகளுக்கெதிராக பற்றி எரிகிறது (சங் 7:11). கடவுளுடைய இத்தன்மையே நரகத்தை அவசியமாக்குகின்றது.

தேவனுடைய கோபம் என்பது சகல விதமான அநீதிகளுக்கும் மேலுள்ள அவருடைய நித்திய வெறுப்பாகும். அது தீமை மீதான தெய்வீக எதிர்ப்பு. அவருடைய பரிசுத்தமே பாவத்துக்கெதிராக கோபமாக பற்றி எரிய ஏதுவாகின்றது. சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமாய் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. (ரோமர் 1:18). இரட்சிப்படையாதவர்கள் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருக்கின்றனர் (எபே 2:3). இக்கோபாக்கினை யிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே ஒரு மார்க்கம் மட்டுமே உள்ளது. “இயேசுவே இனிவரும் கோபாக்கினையிலிருந்து நம்மை இரட்சிக்கிறவருமாயிருக்கிறார் (1தெச 1:10) தேவன் நீதியுள்ள நியாயாதிபதி. அவர் நாள்தோறும் பாவியின் மேல் சினங்கொள்கிற தேவன் (சங் 7:11) எனினும் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து

நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:8-9).

கேள்விகள்

1. தேவன் தன்னுடைய சிருஷ்டிகள் மீது தன்னுடைய பரிசுத்த நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் வண்ணமாய், எவ்வாறு தன்னுடைய நியாயம் நீதி என்பவைகளை வெளிப்படுத்தியுள்ளார் என்பதனை வசன ஆதாரத்துடன் விளக்கமாக கூறுக?
2. தேவனுடைய பொறாமை எப்பொழுது நம்மிடத்தில் வெளிப்படக்கூடியதாய் இருக்கின்றது என்பதையும், தேவனுடைய பொறாமை என்கிற இத்தன்மையை நாம் புரிந்து கொள்வதற்கு இப்பாடத்தில் கூறப்பட்டுள்ள உவமைகளையும் வசன ஆதாரங்களையும் கூறுக?
3. தேவனுடைய கோபம் என்கிற தேவனுடைய தன்மையை குறித்து இப்பாடத்தின் மூலமாக கற்றுக்கொண்டவைகளை வசன ஆதாரத்துடன் கூறுக?